மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல் .

முன்னிலை. திரு.அ. மருதுபாண்டி, B.Com.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இரணியல்

(கூடுதல் முழு பொறுப்பு)

2024 -ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12- ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண். 09 /2024**

**in**

**அசல் வழக்கு எண் .34 /2023.**

நீலஜனகதாஸ் ...மனுதாரர் / 1-ஆம் பிரதிவாதி

/எதிர் /

1. பாலச்சந்திரன்
2. செல்லன்குமார் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. அபினேஷ்
4. சார்பதிவாளர்
5. கிராம நிர்வாக அலுவலர், ரீத்தாபுரம்
6. வட்டாட்சியர், கல்குளம்
7. தமிழ்நாடு அரசுக்காக வேண்டி

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர். ...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்.

இம்மனு 15.03.2024 அன்று என் முன் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர் / 1-ஆம் பிரதிவாதி தரப்பில் மனுதாரர் அவர்கள் தன்னிலையில் ஆஜராகியும், 1, 2-ஆம் எதிர்மனுதாரர்கள் / 1, 2-ஆம் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.தென்கரை மகாராஜன் அவர்கள் ஆஜராகியும், 3-ஆம் எதிர்மனுதாரர் / 3-ஆம் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. விமலன் அவர்கள் ஆஜராகியும், 4, 5, 6-ஆம் எதிர்மனுதாரர்கள் / 4, 5, 6-ஆம் வாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்த நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை XII, விதி 6, XXIII விதி 3A மற்றும் பிரிவு 151-இன் கீழ் அற்பமான, அவதூறான, வீண் தொல்லை தரக்கூடிய அசல் வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டிய வகைக்காக மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

(i) மனுதாரர் அசல் வழக்கில் 1-ஆம் பிரதிவாதி ஆகும். 3 முதல் 6 பிரதிவாதிகள் பெயரளவுக்கு 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் ஆகும். 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள் / வாதிகளது இவ்வழக்குரை பத்தி 1-இல் நாகர்கோவில் சார்பு நீதிமன்றம் மூலம் பாகபிரிவினை வழக்கு அசல் வழக்கு எண் 28/1954 என தாக்கல் செய்யப்பட்டு, பாகபிரிவினை செய்யப்பட்டது, அதன்படி இவ்வழக்கு 'A' பட்டிகையில் புதிய புல எண் 311/12A ல் 12.55 ஏருக்கு 31

சென்ட் 1-ஆம் எதிர்மனுதார் / 1-ஆம் வாதி பெயரில் உள்ளது. மேலும் புதிய புல எண் 311/12-இல் 28 1/2 சென்ட் சொத்தானது மேற்படி அசல் வழக்கு எண் 28/1954 வழக்கு தீர்ப்பாணை நிபந்தனையில் 'A' பட்டிகை 8 -வது அயிட்டம் பழைய புல எண் 8204, புதிய புல எண் 311/12A ஆகும். அதில் மனுதாரருக்கும், 2-ஆம் எதிர்மனுதாரர் / 2-ஆம் வாதிக்கும் எந்த உரிமையும் இல்லை.

(ii) மேலும் புதிய புல எண் 351/14-இல் 18 சென்டுள்ளது என்றும், 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொண்ட மேற்படி OS.No.28/1954 வழக்கு தீர்ப்பாணை நிபந்தனையின் A பட்டிகை 1 முதல் 11 மற்றும் 13 முதல் 16 வரையான சொத்துக்களில் இடம் பெறவில்லை . அது மேற்படி தீர்ப்பாணையில் நீக்கப்பட்ட 'C' பட்டிகை 2-வது அயிட்டம் பழைய புல எண் 8205 சொத்து எனவும், புதிய புல எண் 311/12B சொத்தானது மேற்படி தீர்ப்பாணை 'A' பட்டிகையிலிருந்து நீக்கப்பட்ட 1-வது அயிட்டம் எனவும், பழைய புல எண் 8205 சொத்து எனவும் தெரிகிறது.

(iii) 1-ஆம் எதிர்மனுதாரர் / 1-ஆம் வாதியும் சேர்ந்து மேற்படி IA.No.303/1976 in OS.No.28/1954 மனு சமாதான தீர்ப்பாணை நிபந்தனையின் 'A' பட்டிகை 5, 6, 11 மற்றும் 15 ஆகிய அயிட்டங்களில் மனுதாரருக்கு சேர வேண்டிய மொத்தம் 1 ஏக்கர் 5 சென்ட் சொத்தை திட்டமிட்டு மனுதாரரின் தாயாரிடம் அடையாளம் காண்பித்து கொடுக்காமல் மறைத்து அபகரித்தும் மேற்படி தீர்ப்பாணை நிபந்தனையின் விவரங்கள் படி அனைத்து சொத்துக்களிலும் நடு பங்கு ஒதுக்காத நிலையில், நடுபங்கு ஒதுக்கியதாக

ஏமாற்றி சில சொத்துக்களை அடையாளம் காட்டி அனுபவிக்க செய்தும் மோசடியில் ஈடுபட்டுள்ளார்கள். 2-ஆம் எதிர்மனுதாரர் / 2-ஆம் வாதியின் தாத்தா செல்லையா நாடார் என்றும், மேற்படி சொத்துக்களை பிறருக்கு ஆவணங்களின்றி விற்பனை செய்து அந்த பணத்தைக் கொண்டு அவரது மனைவியும் மேற்படி அசல் வழக்கு எண். 28/1954 வழக்கு 3-ம் பிரதிவாதியான செல்லத்தங்கம் நாடாச்சி பெயரில் ஆவண எண் 100/1958 படி 1 ஏக்கர் 60 கிரயம் பெற்றதை மறைப்பதற்கு வேண்டி செயல்பட்டதும், (அது தற்போது 1 ஏக்கர் 70 சென்ட் மாறியுள்ளது) அதே வழியை 1 மற்றும் 2-எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தற்போது பின்பற்றி மனுதாரருக்கு உரிமைப்பட்ட வழக்குரையில் குறிப்பிடப்பட்ட புதிய புல எண் 311/12B மற்றும் 351/14 சொத்துக்களையும் அபகரிக்க திட்டமிட்டு அவர்களுக்கு உரிமைப்பட்டது என ஒப்புக் கொண்ட புதிய புல எண் 311/12A-இன் எல்கைகளை வழக்குரையில் குறிப்பிடாமல் நுட்பமாக இவ்வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்தியது மனுதாரருக்கு தெரிய வந்தது.

(iv) எல்கை குறிப்பிடாத புல எண் 311/12B மனுதாரருக்கு உரிமைப்பட்டது என ஒப்புக் கொண்ட அவர்கள் மனுதாரரின் சொத்தில் அத்து மீறி நுழைய முயன்றதாக ஒப்புக் கொண்டுள்ளாரர்கள். புதிய புல எண் 311/12B சொத்து மனுதாரருக்கு உரிமைப்பட்டது. 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் திட்டமிட்டு போலி ஆவணங்கள் உருவாக்கி

பயன்படுத்தியது மட்டும் அல்லாமல் அவர்கள் ஒப்புக் கொண்ட மேற்படி அசல் வழக்கு எண் .28/1954 வழக்கு தீர்ப்பாணை நிபந்தனை படி அவர்களுக்கு உரிமையில்லாத சொத்து விவரங்களை இவ்வழக்கு பட்டிகை சொத்துக்களாக குறிப்பிட்டுள்ளார்கள். அசல் வழக்கு எண் .28/1954 வழக்கு தீர்ப்பாணையானது சமாதான மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் பெறப்பட்டது. அதில் நீக்கப்பட்ட சொத்துக்களில் உரிமைக் கோரி புதிய வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி தடை உள்ளது , அந்த சட்ட விதிகளை நன்கு தெரிந்திருந்த 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் மேற்படி தீர்ப்பாணை பெற்று 46 வருடங்களுக்கு பின் இந்நீதிமன்றத்தை ஏமாற்றி வழக்கை கோப்பில் எடுக்க செய்த சட்ட விரோத செயலில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

3. **1, 2 எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிரருரையின் சுருக்கம்** :-

பட்டிகை சொத்தில் தனக்குரிய பாகத்தை 2007 -ஆம் ஆண்டு மனுதாரர் ஜெயச்சந்திரன் என்பவருக்கு விற்ற நிலையில் பாலச்சந்திரன் பாகத்தை அதே ஜெயச்சந்திரனுக்கு விற்பதாக உடன்படிக்கையின் அடிப்படையில் தனது பாகத்தை கொடுக்கவில்லை என கூறி இந்நீதிமன்றதில் அசல் வழக்கு எண் 50/2011 வழக்கு தாக்கல் செய்து பெற்ற உத்தரவை எதிர்த்து பாலச்சந்திரன் பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில்

AS.No.80/11 மேல்முறையீடு தாக்கல் செய்து உத்தரவு பெற்றார். இந்நிலையில் அதை மறைத்து மேற்படி ஜெயச்சந்திரன் தாக்கல் செய்த O.S.No.177/12 இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் மனுதாரர் பட்டிகை சொத்தில் வாதிகளின் பங்கையும் சேர்த்து அவரது மகனான 2-ம் பிரதிவாதி பெயரில் போலி ஆவணம் உருவாக்கியுள்ளார். 1-ம் பிரதிவாதி உருவாக்கிய போலி ஆவணங்களுக்கு மற்ற பிரதிவாதிகளும் உடந்தையாக இருந்ததால் அவர்களும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். O.S.No.177/12 வழக்கில் 1-ஆம் பிரதிவாதி வா.சா-2 ஆகவும், 2-ஆம் பிரதிவாதி வா.சா. 2 ஆகவும் ஒரே வழக்கில் சட்ட விதிகளுக்கு முரணாக செயல்பட்டதால் நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்ட நிலையில் காரணம் கூறி தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரர்/ 1-ஆம் பிரதிவாதி கோரும் பரிகாரம் மேற்படி-யாருக்கு கிடைக்கத்தக்கதா ? அல்லது இல்லையா?

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மிக கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

1. மனுதாரர் தரப்பில் மனுதாரர்/ 1-ஆம் பிரதிவாதி வாதிடுகையில் வழக்கு பட்டிகை சொத்து மற்றும் பிற சொத்துக்களைப்பொறுத்து 1-ஆம் வாதி மற்றும் 1-ஆம் பிரதிவாதியின் தாத்தாவான நீலன் நாடாரின் சொத்துக்களைப்

பொறுத்து மேற்படியாரின் வாரிசுகளுக்கு இடையே பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு எண்.28/1954-ஆனது மாண்புமிகு சார்பு நீதிமன்றம், நாகர்கோவில் முன்பாக தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி அசல் வழக்கில் கடந்த 06.07.1976- அன்று பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பாணையின் படி இவ்வழக்கு பட்டிகை சொத்துக்கள் மனுதாரர்/ 1-ஆம் பிரதிவாதியின் தகப்பனாரான நாராயண நாடாருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற இவ்வழக்கு பட்டிகை சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை மனுதாரர் /1-ஆம் பிரதிவாதியின் தகப்பனார் ஆண்டனுபவம் செய்து வந்து காலஞ்சென்ற பின்பு வாரிசு அடிப்படையில் மனுதாரர்/1-ஆம் பிரதிவாதி அதன் பின் தொடர்ச்சியாக ஆண்டனுபவம் செய்து வந்து அவரது மகனான 2-ஆம் பிரதிவாதி பெயரில் ஆவண எண் 1121/2021-இன் படி இஷ்டதானம் எழுதி வைத்ததாகவும், தவிர மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2-வது இன சொத்தும், இவ்வழக்கு பட்டிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 2-வது இன சொத்துமான புதிய புல எண் 351/14-இல் அடங்கியுள்ள 18 சென்ட் சொத்தானது மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தந்தைக்கு ஒதுக்கப்படவில்லை என்றும், தவிர மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தந்தைக்கும், மற்றும் 1-ஆம் வாதியின் தந்தையான காலஞ்சென்ற பொன்னையா நாடாரின் வாரிசுகள் மற்றும் செல்லையா நாடாருக்கு தலா 6 சென்ட் ஒதுக்கப்பட்டதாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தவிர இவ்வழக்கு 1-ஆம் இன சொத்தான புதிய

புல எண் 311/12B ஆனது மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு தான் ஒதுக்கப்பட்டது என்றும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது, தவிர இவ்வழக்கு 2-ஆம் இனச்சொத்தானதும் மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தந்தையான மேற்படி நாராயண நாடாருக்குத்தான் ஒதுக்கப்பட்டது. எனவே, மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையின் அடிப்படையில் இவ்வழக்கை தள்ளுபடி செய்யும் வகைக்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

2. 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் மனுதாரர்/1-ஆம் பிரதிவாதி குறிப்பிட்டது போன்று அசல் வழக்கு எண் 28/1954-இல் இவ்வழக்கு பட்டிகை சொத்துக்களில் ஒன்றான 1-ஆம் இனச்சொத்து மட்டுமே மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு புதிய புல எண் 311/12B-இல் ஒதுக்கப்பட்டது என்றும், தவிர, இவ்வழக்கு பட்டிகை சொத்தில் 2-வது இன சொத்தாக விவரிக்கப்பட்டுள்ள புதிய புல எண் 351/14 -ற்கு உட்பட்ட மொத்தம் 18 சென்ட்டில் மனுதாரர் / 1-ஆம் பிரதிவாதியின் தந்தை, 1-ஆம் வாதியின் தந்தை மற்றும் நீலநாடாரின் வாரிசுகளில் ஒருவருரான செல்லையா நாடாருக்கு தலா 6 சென்ட் வீதம் ஒதுக்கப்பட்டது என்றும், ஆனால், மேற்படி அசல் வழக்கு எண். 28/1954-இல் வழங்கப்பட்ட சமரச தீர்ப்பாணைக்கு எதிராக மனுதாரர் /1-ஆம் பிரதிவாதி அவரது மகனான 2-ஆம் பிரதிவாதிக்கு ஆவண எண் . 1121 / 2021-இன் மூலம் இஷ்டதானமாக கொடுத்துள்ளதால் மேற்படி

இஷ்டதான ஆவண எண்.1121/2021-ஆனது செல்லுபடியாகக்கூடியது அல்ல என தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

3. அசல் வழக்கு எண் 28/1954-இல் வழங்கப்பட்ட சமரச தீர்ப்பாணையை மிக கவனமாக பரிசீலனை செய்கையில் மேற்படி சமரச தீர்ப்பாணையில் 'பி' பட்டிகை சொத்தானது மனுதாரர் / 1-ஆம் பிரதிவாதியின் தகப்பனாரான நாராயண நாடாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது . மேற்படி 'பி' பட்டிகை சொத்தில் மொத்தம் 4 இன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 2-வது இன சொத்தாக விவரிக்கப்பட்டுள்ள பழைய சர்வே எண்.8205-இல் 18 சென்ட் இடத்தை மட்டும் மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தந்தையான நாராயண நாடாருக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. அதே வேளையில், மேற்படி பழைய சர்வே எண் 8205-இல் உள்ள சொத்தில் மேற்கணையா பாதி இடத்தை மேற்படி சமரச தீர்ப்பாணையின் 'ஏ' பட்டிகை சொத்தில் 12-வது இனச்சொத்தாக விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது காலஞ்சென்ற பொன்னையா நாடாரின் வாரிசுகளான 1-ஆம் வாதி மற்றும் அவருடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சமரச தீர்ப்பாணையில் உள்ள 'ஏ' பட்டிகை சொத்தில் உள்ள 9-வது இனச்சொத்தை காலஞ்சென்ற பொன்னையா நாடாரின் வாரிசுகளுக்கு ஒதுக்கி கூறும்பொழுது "பிராமணன் கோட்டவிளை புரயிடத்தில் நில்க்குன்ன

புளியமரங்கள் முழுவனும்" என்று கூறி மேற்படி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. அதாவது, பழைய புல எண்.8205-ற்கு உட்பட்ட சொத்தில் மேக்கணையா பாதி இடம் காலஞ்சென்ற பொன்னையா நாடாரின் வாரிசுகளுக்கு என்றும், மேற்படி புல எண்ணிற்கு உட்பட்ட இடத்திலுள்ள புளியமரங்கள் முழுவதும் மேற்படியார்களுக்கே உரிமைபட்டது என்றும் மற்றும் மேற்படி அதே புல எண்ணில் 18 செண்ட் மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தந்தைக்கு என்றும் அசல் வழக்கு எண்.28/1954-இல் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பாணையில் கூறப்பட்டுள்ளதால், இவ்வழக்கு 2-ஆம் இனச்சொத்திலும் புளியமரங்கள் உள்ளதா என்று கண்டறியவேண்டும். தவிர, மனுதாரர் / 1-ஆம் பிரதிவாதியானவர் மேற்படி 18 சென்டை தவிர இஷ்டதான ஆவணமான 1121/2021 ஆவணத்தில் புளியமரங்களை பொறுத்து இஷ்டதானமாக கொடுக்கவில்லை. தவிர, சமரச தீர்ப்பாணையில் குறிப்பிடும் பொழுது பழைய புல எண் 8205-இல் உள்ள புளியமரங்கள் அனைத்தும் பொன்னையா நாடாரின் வாரிசுகளுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளதால் மேற்சொன்னவாறு இவ்வழக்கு 2-ஆம் இனச்சொத்திலும் புளியமரங்கள் எதுவும் உள்ளதா என்பதை வழக்கின் முழு விசாரணையின் முடிவில் தான் முடிவு செய்ய முடியும், எனவே மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் மகனான 2-ஆம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தியுள்ள இஷ்டதான ஆவணமான

1121/2021-ஐ பொறுத்தும் வழக்கின் முழு விசாரணையின் முடிவில்தான் முடிவு செய்ய முடியும் என அறியமுடிகிறது.

5. மேற்படி சூழ்நிலையில் மனுதாரர்/ 1-ஆம் பிரதிவாதி இவ்வழக்கு 1-ஆம் இன சொத்தைப் பொறுத்து ஆவண எண் .1121/ 2021 -இன் மூலம் 2-ஆம் பிரதிவாதிக்கு எழுதி வைக்க உரிமையுள்ளதால் மேற்படி சொத்தை பொறுத்து 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் பரிகாரம் கோர முடியாது, ஏனென்றால் மேற்படி 1-ஆம் இனச்சொத்தானது மனுதாரர்/1-ஆம் பிரதிவாதியின் தந்தைக்கு ஒதுக்கப்பட்டதாக 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/ வாதிகளால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அசல் வழக்கு எண்.28/1954-இல் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பாணையிலும் மேற்படியாரின் உரிமை முடிவு செய்யப்பட்டுள்ளது. தவிர 2-வது இனச்சொத்தாக விவரிக்கப்பட்டுள்ள பழைய புல எண் 8205-இல் உள்ள 18 சென்ட் மட்டுமே மனுதாரர்/1-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியபட்டுள்ளதாகவும், மேலும் மேற்படி 18 சென்டில் புளியமரங்கள் எதுவும் சமரச தீர்ப்பாணையில் கூறியபடி உள்ளதா என்று வழக்கின் முழு விசாரணையின் முடிவில்தான் முடிவு செய்யப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாலும் மேற்படி 2-வது இனச்சொத்தைப் பொறுத்து மட்டுமே 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பரிகாரம் கோர உரிமையுடையவர்கள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மேற்படி தீர்மானத்தைப் பொறுத்து பிராதை திருத்தம் செய்யுமாறு 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும்,

2-வது இன சொத்தைப் பொறுத்து மனுதாரர் /1-ஆம் பிரதிவாதி, 2-வது பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தியுள்ள இஷ்டதான ஆவணமான 1121 / 2021 -ஐ பற்றி வழக்கின் முழு விசாரணையின் முடிவில் முடிவு செய்யப்படும் என்று இவ்வாறாக தீர்மானிக்கப்படுகிறது.

6. **<u>இறுதி முடிவு</u>** :-

முடிவாக, மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணி மூலம் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்) A. மருதுபாண்டி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்
( கூடுதல் முழு பொறுப்பு)

மா.உ.நீதிமன்றம், இரணியல்,
இடைக்கால மனு எண். 09 /2024
in
அசல் வழக்கு எண் .34 /2023.
உத்தரவு, நாள் 12.04.2024

உண்மை நகல்